## தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காக

# நாடாளுமன்றத்தில் கழக உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகள்!



**புதுடெல்லி, டிச. 5 -**

**நாடாளுமன்ற குளிர் கால கூட்டத் தொடர் டிச.1 அன்று தொடங்கியது. இத் தொடரில் மக்களவை, மாநிலங்களவை இரு அவைகளிலும் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்நாட்டின் நலனுக்காக முன்னேற்றத்திற்காக நேற்று முன்தினம் (3.12.2025) எழுப்பிய கேள்விகள் வருமாறு:**

**1. பள்ளிகளில் போதிய ஆசிரியர்கள் நியமிக்க நடவடிக்கை என்ன?**

**திருச்சி சிவா எம்.பி.கேள்வி**



பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனா (PMMSY) திட்டத்தின் கீழ் நாட்டில் மாநில வாரியாக நிறுவப்பட்ட அல்லது முன்மொழியப்பட்ட கடற்பாசி பூங்காக்களின் விவரங்கள் கேட்டு திமுக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி மக்களவையில் கேள்வி எழுப்பியுள்ளார். அதன் விவரங்கள்:

தூத்துக்குடி மாவட்டத்தில் PMMSY திட்டத்தின் கீழ் முன்மொழியப்பட்ட கடற்பாசி பூங்காவின் பணிகள் தொடங்குவதற்கான தற்போதைய நிலை மற்றும் எதிர் பார்க்கப்படும் காலக்கெடு என்ன? தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த கடற்பாசி சாகுபடியில் ஈடுபட்டுள்ள மக்களின் எண்ணிக்கை குறித்த விவரங்கள் என்ன?

சுற்றுச்சூழல் ரீதியாக உணர்திறன் வாய்ந்த பகுதிகளில் கப்பாஃபிகஸ் அல்வரேசி போன்ற ஆக்கிரமிப்பு கடற்பாசி இனங்களை வளர்ப்பதால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகளை குறைக்க அரசாங்கம் வகுத்துள்ள திட்டங்கள் என்ன? தற்போதைய கடல்பாசி உற்பத்தி நிலைகளுக்கும் கடல்பாசி சார்ந்த மூலப்பொ ருட்களுக்கான தொழில்துறை தேவைக்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்ன?

**2. ஓபிசிக்களிடையே கிரீமி லேயர் நிர்ணயிப்பதற்கான வருமான அளவுகோல்கள்**

**ராஜாத்தி சல்மா கேள்வி**




ஏப்ரல் 2025 இல் சமர்ப்பிக்கப்பட்ட இதர பிற்படுத்த ப்பட்ட வகுப்பினரின் நலனுக்கான மக்களவை குழுவின் ஏழாவது அறிக்கையின் அடிப்படையில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரில் பொருளாதார ரீதியாக முன்னேறிய பிரிவை(Creamy layer) நிர்ணயிப்பதற்கான வருமான அளவுகோல்களை திருத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதா என திமுக மாநிலங்களவை உறுப்பினர் ராஜாத்தி சல்மா கேள்வி எழுப்பியுள்ளார்.

வரம்பை திருத்தும்போது கிராமப்புற மற்றும் நகர்ப்புற வாழ்க்கைமுறைகளை பொறுத்து வேறுபடும் செலவுகளை காரணியாக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். திருத்தத்தில் தாமதங்களைத் தவிர்க்க ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கும் பணவீக்கத்திற்கு ஏற்ப தானியங்கி குறியீட்டுமுறை பரிசீலிக்கப்பட வேண்டும் என குறிப்பிட்டுள்ள அவர், குறிப்பாக தமிழ்நாடு உட்பட பல மாநிலங்களின் தொடர்ச்சியான கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டு அடுத்த திருத்தத்திற்கான எதிர்பார்க்கப்படும் காலக்கெடு என்ன என்றும் அவர் கேட்டுள்ளார்.

**3. தமிழ்நாட்டிற்கு கூடுதல் வந்தே பாரத் இரயில்கள் வருமா?**

**டாக்டர் கலாநிதி வீராசாமி கேள்வி**



தமிழ்நாட்டில் தற்போது இயங்கும் வந்தே பாரத் இரயில்கள் குறித்து நாடாளுமன்றத்தில் திமுக வட சென்னை மக்களவை உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி பின்வரும் கேள்விகளை எழுப்பியுள்ளார்.

தமிழ்நாடு உட்பட தென் இந்தியாவில் இயங்கும் மொத்த வந்தே பாரத் இரயில்கள் எத்தனை? வரும் நிதியாண்டில் அரசு புதிதாக இயக்க திட்டமிடப்பட்டுள்ள வந்தே பாரத் இரயில்களில் தடங்கள் மற்றும் அது இணைக்கும் நகரங்கள் யாவை? புதிய வழித்தடங்களை தேர்ந்தெடுக்க அரசு வகுத்திருக்கும் அளவுகோல்கள் என்ன? புதிய இரயிகளுக்காக ஏற்கெனவே வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளின்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

**4.சர்க்கரைத் ஆலைகளிருந்து 50% எத்தனால் பெறுவதை உறுதி செய்க!**

**செல்வகணபதி கோரிக்கை**



இந்திய சர்க்கரை மற்றும் உயிரி எரிசக்தி உற்பத்தியாளர்கள் சங்கம் 50 சதவீத எத்தனாலை சர்க்கரை ஆலை களிலிருந்து பெறப்படுவதை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும் என்று கோரியுள்ளதை சுட்டிக் காட்டி நாடாளுமன்றத்தில் திமுக மக்களவை உறுப்பினர் செல்வகணபதி கேள்வி எழுப்பியுள்ளார்.

சர்க்கரைத் தொழில் ஆண்டுக்கு 650 கோடி லிட்டர் எத்தனால் வழங்கும் திறன் கொண்ட கிட்டத்தட்ட ரூ.40,000 கோடியை முதலீடு செய்துள்ள நிலையில் சர்க்கரை சார்ந்த தீவனப் பொருட்களிலிருந்து 289 கோடி லிட்டர் அல்லது மொத்தத் தேவையில் 28% எத்தனால் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளதாக வந்த செய்திகளின் உண்மைத்தன்மை என்ன?

சர்க்கரைத் தொழில் குறைந்தபட்ச ஆதரவு விலையை அதிகரிக்கவும், சர்க்கரை ஏற்றுமதி கொள்கையை அறிவிக்கவும், எத்தனால் கொள்முதல் விலையை அதிகரிக்கவும் வைத்த கோரிக்கைகளின் மீதான நடவடிக்கை என்ன?

**5. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி செய்யும் மாநிலங்களுக்கு ஊக்கத் தொகை வழங்கிடுக?**

**தஞ்சாவூர் – முரசொலி கோரிக்கை**



நாட்டில் உபரியாக உள்ள புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி செய்யும் மாநிலங்களுக்கு அரசாங்கம் ஊக்கத்தொகை அளிக்க வேண்டி நாடாளுமன்றத்தில் திமுக மக்களவை உறுப்பினர் முரசொலி கோரிக்கை வைத்துள்ளார். மேலும் அதில், நாடு முழுவதும் நிறுவப்பட்டு உருவாக்கப்பட்ட புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறன் பற்றிய விவரங்கள் என்ன? கடந்த ஐந்து ஆண்டுகளில், பல்வேறு புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மின் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட மற்றும் வழங்கப்பட்ட நிதிகள் என்ன என்பது குறித்தும் கேள்வி எழுப்பியுள்ளார்.

**6. ஒரே நாடு ஒரே ரேஷன் - சிக்கல்களை சமாளிக்குமா ஒன்றிய அரசு?**

**கள்ளக்குறிச்சி மலையரசன் கேள்வி**



ஒரே நாடு ஒரே ரேஷன் அட்டை (ONORC) திட்டத்தின் தற்போதைய நிலை குறித்து மக்களவை உறுப்பினர் மலையரசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இத்திட்டம் முழுமையாக செயல்படுத்தப்பட்ட மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் எண்ணிக்கை என்ன? ONORC அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து, புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் உட்பட, மாநிலங்கள் முழுவதும் பொது விநியோக முறை (PDS) சலுகைகளை பெறக்கூடிய ரேஷன் அட்டை பயனாளிகளின் மொத்த எண்ணிக்கை என்ன? நாடு முழுவதும் ONORCஐ செயல்படுத்துவதில் அரசு சந்திக்கும் தொழில்நுட்ப அல்லது நிர்வாக சவால்கள் என்ன?

புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் தமிழ்நாடு உட்பட நகர்ப்புற ஏழைகளுக்கான ரேஷன் சலுகைகளை தடையின்றி எடுத்துச் செல்வதை உறுதி செய்ய அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்ன? தகுதியுள்ள எந்தவொரு பயனாளியும் விலக்கப்படவில்லை என்பதை உறுதிசெய்ய, ONORC திட்டத்தைக் கண்காணிக்க, மதிப்பீடு செய்ய மற்றும் வலுப்படுத்த அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

**7. தமிழ்நாட்டில் சூரிய மின்சக்தி பூங்காஅமைக்க கோரிக்கை!**

**தருமபுரி அ.மணி**



தமிழ்நாட்டில், குறிப்பாக சூரிய மின்சக்தி உற்பத்திக்கு அதிக வாய்ப்புள்ள தர்மபுரி மாவட்டத்தில், புதிய சூரிய மின்சக்தி பூங்காக்களை அமைக்க ஒன்றிய அரசிடம் உள்ள திட்டங்கள் குறித்து தருமபுரி திமுக எம். பி. அ. மணி கேள்வி எழுப்பியுள்ளார்.

சூரிய மின்சக்தி பூங்கா திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு இதுவரை விடுவிக்கப்பட்ட நிதி உதவியின் விவரங்கள் என்ன? தர்மபுரி மற்றும் தமிழ்நாட்டின் பிற சாத்தியமான மாவட்டங்களில் சூரிய மின்சக்தி பூங்காக்கள் மற்றும் பெரிய அளவிலான சூரிய மின்சக்தி திட்டங்களை அமைப்பதில் தனியார் துறை முதலீட்டை ஊக்குவிக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

**8.கிணத்துக்கடவு மற்றும் பொள்ளாச்சி ரயில் நிலையங்களை சேலம் கோட்டத்திற்கு மாற்றுவது எப்போது?**

**ஈஸ்வரசாமி கேள்வி**



கிணத்துக்கடவு மற்றும் பொள்ளாச்சி ரயில் நிலையங்களை பாலக்காடு கோட்டத்திலிருந்து சேலம் கோட்டத்திற்கு மாற்றுவது தொடர்பாக வைத்த கோரிக்கைகளின்மீது ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகல் குறித்து பொள்ளாச்சி திமுக எம்.பி. கே. ஈஸ்வரசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

தற்போதைய கோட்ட ஏற்பாடு உள்கட்டமைப்பு மேம்பாடுகள் மற்றும் பயணிகள் வசதிகளில் தாமதத்தை ஏற்படுத்துகிறது என்பதை பலமுறை வலியுறுத்தியுள்ளதை சுட்டிக்காட்டி அது குறித்து ஒன்றிய அரசு தமிழ்நாடு மாநில அரசுடன் நடத்திய ஆய்வு மற்றும் ஆலோசனைகள் என்ன? கோயம்புத்தூர் மற்றும் பொள்ளாச்சி பகுதிகளில் பயணிகளுக்கு சமமான வளர்ச்சியை உறுதி செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் குறித்தும் அவர் கேட்டுள்ளார்.

**9. தமிழ்நாட்டிற்கு சமக்ர சிக்ஷா நிதியை குறைத்திருப்பது ஏன்?**

**ராஜாத்தி சல்மா கேள்வி**

சமக்ர சிக்ஷா திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்கீட்டை முந்தைய ஆண்டைவிட 34 சதவீதம் குறைத்திருப்ப தற்கான காரணங்களை கேட்டு நாடாளுமன்றத்தில் திமுக மாநிலங்களவை உறுப்பினர் ராஜாத்தி சல்மா கேள்வி எழுப்பியுள்ளார். அதில் அவர் கடந்த மூன்று ஆண்டுகளில் இந்தத் திட்டத்தின்கீழ் மாநில வாரியாக ஒதுக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட நிதியின் விவரங்கள் மற்றும் சமக்ர சிக்ஷா திட்டத்தின்கீழ் மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீட்டை தீர்மானிக்கும் பல்வேறு காரணிகள் குறித்தும் விவரங்கள் அளிக்குமாறு கேட்டுள்ளார்.


**10.பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்கள் நியமனத்தில் தாமதம் ஏன்? நடவடிக்கை என்ன?**

**இரா. கிரிராஜன் கேள்வி**



மத்திய பல்கலைக்கழகங்கள் மற்றும் மாநில அரசுகளால் நடத்தப்படும் பல்கலைக்கழகங்களுக்கு துணை வேந்தர்கள் (VC) நியமனத்தில் ஏற்படும் அதிகப்படியான தாமதம் குறித்து ஒன்றிய அரசிடம் திமுக மாநிலங்களவை உறுப்பினர் ஆர். கிரிராஜன் கேள்வி எழுப்பியுள்ளார்.

மாநில அரசுகளால் நடத்தப்படும் பல்வேறு பல்கலைக்கழகங்களுக்கு துணை வேந்தர்க ளை நியமிப்பதில் வேந்தர்களின் தேவையற்ற தலையீடுகள் மற்றும் இடையூறுகளைக் குறைக்க ஒன்றிய அரசிடம் வைத்த வேண்டுகோள்களின்மீது நடவடிக்கைகள் என்ன? பல்கலைக்கழகங்களுக்கு துணைவேந்தர்களை நியமிப்பதற்கும், சுமூகமான நிர்வாகத்திற்கும் ஒன்றிய அரசு எடுத்த தீர்வு நடவடிக்கை என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.



கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர், அமைச்சர் சி.வி.கணேசன் முன்னிலையில் அ.தி.மு.க முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கலியமூர்த்தி அவர்களின் உதவியாளர் இலக்கூர் நடேசன் தி.மு.கழகத்தில் இணைந்தார். உடன் மங்களூர் ஒன்றியக் கழக செயலாளர்கள் பட்டூர் வீர. அமிர்தலிங்கம், பா. செங்குட்டுவன் உள்ளனர்.

---

## தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி

# தொகுதி, ஒன்றிய, நகர, பகுதி நிர்வாகிகள் நியமனம்!

## தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் முனைவர் TRB ராஜா அறிவிப்பு!

திமுக தகவல் தொழில்நுட்ப அணி தொகுதி, ஒன்றிய, நகர மற்றும் பகுதி நிர்வாகிகள் பின்வருமாறு அறிவிக்கப்படுகிறார்கள். ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மாவட்ட நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து செயல்படுவார்கள்.

**மணப்பாறை சட்டமன்ற தொகுதி**

மணப்பாறைதொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) நியமிக்கப்பட்ட திருமதி.M.தீபா அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக திருமதி.M.லதாஅவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மணப்பாறைநகர தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) நியமிக்கப்பட்ட திருமதி.M.லதா அவர்கள் தொகுதிஒருங்கிணைப்பாளராகநியமிக்கப்பட்டதால்அவருக்கு பதிலாக திருமதி.M.தீபா அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மருங்காபுரி தெற்கு ஒன்றியதகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) நியமிக்கப்பட்ட திரு.A.சின்ன கருப்பன்அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக திரு.P.விஜய்அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மணப்பாறை ஒன்றியதகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) நியமிக்கப்பட்ட திரு. விக்னேஷ் குமார்அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக திரு.N.சண்முகம்அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மணப்பாறை ஒன்றியதகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) நியமிக்கப்பட்ட திரு.N.சண்முகம் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக திரு.V.ரமேஷ் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மருங்காபுரி வடக்கு ஒன்றியதகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) நியமிக்கப்பட்ட திருமதி.N.மீனாட்சி அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக திருமதி.ச.கார்த்திகாஅவர்கள் நியமிக்கப்படுகிறார்.

**திருச்சி கிழக்கு சட்டமன்ற தொகுதி**

மலைக்கோட்டை பகுதிதகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) நியமிக்கப்பட்ட திரு. சரவணன்அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக திரு.அ.செந்தில்குமார்அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மலைக்கோட்டை பகுதிதகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) நியமிக்கப்பட்ட திரு.S.வெங்கடேஷ்அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக திரு.நா.சரத்குமார் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மார்க்கெட் பகுதிதகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) நியமிக்கப்பட்ட திரு.P.கார்த்திக்அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக திரு.K.தோஹறிஅவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மார்க்கெட் பகுதிஒன்றியதகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) நியமிக்கப்பட்ட திருமதி.P.தனலட்சுமி அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக செல்வி.பாத்திமா அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

பாலக்கரை பகுதிதகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) நியமிக்கப்பட்ட திரு. க.ரூபானந்த் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக திரு.ப.விவேக் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

பாலக்கரை பகுதிதகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) நியமிக்கப்பட்ட திரு.V.அருண் குமார்அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக திரு.க.ரூபானந்த்அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

பாலக்கரை பகுதிஒன்றியதகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) நியமிக்கப்பட்ட திருமதி.R.வர்ஷா அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக செல்வி.ஜே.சந்தியா அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

அரியமங்கலம்பகுதிதகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) நியமிக்கப்பட்ட திரு.S.பார்த்தசாரதிஅவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக திரு.ராஜாஅவர்கள் நியமிக்கப்படுகிறார்.

அரியமங்கலம்பகுதிஒன்றியதகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) நியமிக்கப்பட்ட திருமதி.புஷ்பலதாஅவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக செல்வி.ச.பர்வீன் பானுஅவர்கள் நியமிக்கப்படுகிறார்.

**திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதி**

திருவெறும்பூர் வடக்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) நியமிக்கப்பட்ட திருமதி.S.ரேணுகாஅவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக திருமதி.R.சசிகலாஅவர்கள் நியமிக்கப்படுகிறார்.

திருவெறும்பூர் பகுதிதகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) நியமிக்கப்பட்ட திருமதி.R.கீர்த்தி அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக திருமதி.பா.அபிநயாஅவர்கள் நியமிக்கப்படுகிறார்.

கூத்தைப்பார் பேரூர்தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) நியமிக்கப்பட்ட திருமதி. R. கோகிலா அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக திருமதி.K.கவிதாஅவர்கள் நியமிக்கப்படுகிறார்.

**அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா**
செயலாளர்
தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணி

---

## நாளை (டிசம்பர் 6) மதுரை விமான நிலையத்தில் – முதல்வருக்கு

# மதுரை வடக்கு - மாநகர் - தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் உற்சாக வரவேற்பு!

## மாவட்ட செயலாளர்கள் அமைச்சர் பி.மூர்த்தி – கோ.தளபதி எம்.எல்.ஏ. – மு.மணிமாறன் அறிக்கை!







மதுரை, டிச.5 –

மதுரையில் 7ஆம் தேதி நடைபெற உள்ள பிரம்மாண்ட நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் பங்கேற்க விமானம் மூலம் நாளை (6ஆம் தேதி) மாலை மதுரை வரும் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு விமான நிலையத்தில் மதுரை வடக்கு, மதுரை மாநகர் மற்றும் மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் எழுச்சிமிகு வரவேற்பு கொடுக்கப்பட உள்ளதாகவும், இதில் கழகத்தினர் பெரும் திரளாக பங்கேற்க வேண்டும் என வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்எல்ஏ, தெற்கு மாவட்ட செயலாளர் மு.மணிமாறன் ஆகியோர் அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளனர்.

அதன் விபரம் வருமாறு :

தமிழ்நாட்டில் எல்லோருக்கும் எல்லாம் எனும் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகிற 07.12.2025 ஞாயிற்றுக்கிழமை இதுவரை தமிழ்நாட்டில் எங்கும் நடைபெறாத வகையில் ஒரு லட்சத்து 67 ஆயிரம் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்காகவும், மாவட்டத்தில் முடிவுற்ற பல்வேறு திட்ட பணிகளை துவக்கி வைக்கவும், பல்வேறு புதிய மக்கள் நலத்திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டவும் நாளை (06.12.2025 – சனிக்கிழமை) மாலை 6.45 மணிக்கு விமானம் மூலம் மதுரை வருகிறார்.


அது சமயம் மதுரை விமான நிலையத்தில் முதல்வர் அவர்களுக்கு மதுரை வடக்கு, மதுரை மாநகர் மற்றும் மதுரை தெற்கு மாவட்ட திமுக சார்பில் எழுச்சிமிகு உற்சாக வரவேற்பு கொடுக்கப்பட உள்ளது

எனவே சிறப்புமிக்க இந்நிகழ்வில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடி கள், கழகத்தினர் என அனைவரும் பெரும் திரளாக பங்கேற்று கையில் இரு வண்ணக் கொடி ஏந்தி முதல்வ ருக்கு உற்சாக கோஷமிட்டு வரவேற்பு கொடுக்க வேண்டும் என வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி, மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ. தளபதி எம்எல்ஏ, தெற்கு மாவட்ட செயலாளர் மு.மணிமாறன் ஆகியோர் அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

---

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் விழுப்புரம் வருகை!

## மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் இரா.லட்சுமணன் எம்.எல்.ஏ. அறிக்கை!



விழுப்புரம், டிச.5 –

விழுப்புரம் மத்திய மாவட்டத்திற்குட்பட்ட விழுப்புரம் சட்டமன்றத் தொகுதிக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத் திற்கு கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகை குறித்து மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ., விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (05.12.2025 – வெள்ளிக்கிழமை) மாலை 5.00 மணியளவில், விழுப்புரம் மத்திய மாவட்டத்திற்கு வருகை தர உள்ளார். நாளை (06.12.2025 – சனிக்கிழமை) காலை 9.00 மணிக்கு, விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் விழுப்புரம் சட்டமன்றத் தொகுதிக் கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்க உள்ளார்.

இந்த ஆலோசனைக் கூட்டம் மண்டலப் பொறுப்பாளர், வேளாண்மை (ம) உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில், நான் (மாவட்டப் பொறுப்பாளர் இரா.லட்சுமணன் எம்.எல்.ஏ.) வரவேற்புரையாற்ற, கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆலோசனை வழங்க உள்ளார்கள்.

இந்நிகழ்வில் கழக துணைப் பொதுச் செயலாளர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ., விழுப்புரம் சட்டமன்றத் தொகுதிப் பார்வையாளர் துரை கி.சரவணன் முன்னிலை வகிக்கிறார்.

எனவே இன்று (05.12.2025 – வெள்ளிக்கிழமை) மாலை 5.00 மணியளவில் இளந்தலைவர் அவர்களை வரவேற்கும் நிகழ்விலும், நாளை (06.12.2025) காலை கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற உள்ள கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொள்ள வருகை தரும் இளந்தலைவர் அவர்களை வரவேற்பதற்கு காலை 8.00 மணிக்கு மாநில நிர்வாகிகள், மாவட்டப் பொறுப்புக்குழு உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய மற்றும் பேரூர் கழகச் செயலாளர்கள், பெருந்தலைவர்கள் மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், விழுப்புரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கிளைச் செயலாளர்கள் மற்றும் பாக முகவர்கள் (BLA2), வரவேற்பு நிகழ்ச்சியில் விழுப்புரம் மத்திய மாவட்டத்தை சேர்ந்த விழுப்புரம் சட்டமன்றத் தொகுதி, வானூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு விழுப்புரம் மத்திய மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டாக்டர் இரா.லட்சுமணன் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.